ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமானுஜாய நம:
ஶ்ரீ மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

## தனியன்

அல்லும் பகலும் அனுபவிப்பார் தங்கட்குச்,
சொல்லும் பொருளுந் தொகுத்துரைத்தான், – நல்ல
மணவாள மாமுனிவன் மாறன் மறைக்குத்,
தணவாநூற் றந்தாதி தான்.

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்,
தன்னருளா லுட்பொருள்கள் தம்முடனே – சொன்ன,
திருவாய் மொழிநூற்றந் தாதியாந் தேனை,
ஒருவா தருந்துநெஞ்சே! உற்று.

---

உயர்வே பரன்படியை யுள்ளதெல்லாந் தாங்கண்டு,
உயர்வேத நேர்க்கொண் டுரைத்து, – மயர்வேதும்
வாராமல் மானிடரை வாழ்விக்கும் மாறன் சொல்,
வேராக வேவிளையும் வீடு. (1)

வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ் நாரணன்றாள்,
நாடுநலத் தாலடைய நன்குரைக்கும், – நீடுபுகழ்
வண்குருகூர் மாறனிந்த் மாநிலத்தோர் தாம் வாழப்,
பண்புடனே பாடியருள் பத்து. (2)

'பத்துடையோர்க் கென்றும் பரனெளிய னாம்பிறப்பால்,
முத்திதரு மாநிலத்தீர்! மூண்டவன்பால், – பத்திசெயும்'
என்றுரைத்த மாறன்றன் இஞ்சொல்லாற் போம்,
நெடுகச் சென்றபிறப் பாமஞ் சிறை. (3)

அஞ்சிறைய புட்கடமை 'ஆழியா னுக்கு,
நீர் எஞ்செயலைச் சொல்லும்' எனவிரைந்து, – விஞ்ச
நலங்கியதும் மாறனிங்கே நாயகனைத் தேடி,
மலங்கியதும் பத்து வளம். (4)

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் றன்மை
உளமுற்றங் கூடுருவ வோர்ந்து, – தளர்வுற்று
நீங்கநினை மாறனைமால் நீடிலகு சீலத்தால்,
பாங்குடனே சேர்த்தான் பரிந்து. (5)

பரிவதிலீ சன்படியைப் பண்புடனே பேசி,
அரியனலன் ஆரா தனைக்கொன்று, – உரிமையுடன்
ஓதியருள் மாறன் ஒழிவித்தா னிவ்வுலகில்
பேதையர்கள் தங்கள் பிறப்பு. (6)

பிறவியற்று நீள்விசும்பிற் பேரின்ப முய்க்கும்,
திறமளிக்குஞ் சீலத் திருமால், – அறவினியன்
பற்றுமவர்க் கென்று பகர்மாறன் பாதமே,

உற்றதுணை யென்றுளமே! ஓடு. (7)

ஓடுமனஞ் செய்கையுரை யொன்றினில்லா தாருடனே,
கூடிநெடு மாலடிமை கொள்ளுநிலை, – நாடறிய
ஓர்ந்தவன்றன் செம்மை யுரைசெய்த மாறனென,
ஏய்ந்துநிற்கும் வாழ்வா மிவை. (8)

இவையறிந்தோர் தம்மளவி லீசனுவந் தாற்ற
அவையவங்க டோறு மணையும் – சுவையதனைப்
பெற்றார்வத் தான்மாறன் பேசினசொற்பேச,
மால் பொற்றாள்நஞ் சென்னி பொரும். (9)

பொருமாழிசங்குடையோன் பூதலத்தேவந்து,
தருமாறோரேதுவறத் தன்னை, – திரமாகப்
பார்த்துரைசெய்மாறன் பதம்பணிகவென்சென்னி,
வாழ்த்திடுகவென்னுடைய வாய். (10)

வாயுந்திருமால் மறையநிற்க,
வாற்றாமை போய்விஞ்சிமிக்க புலம்புதலாய், – ஆய
அறியாதவற்றோ டணைந்தழுதமாறன்,
செறிவாரைநோக்குந் திணிந்து. (11)

திண்ணிதாமாறன் றிருமால்பரத்துவத்தை,
நண்ணியவதாரத்தே நன்குரைத்த, – வண்ணமறிந்
தற்றார்கள்யாவ ரவரடிக்கேயாங்கவர்பால்,
உற்றாரைமேலிடா தூன். (12)

ஊனமறவேவந் துள்கலந்தமாலினிமை யானது,
அனுபவித்தற் காந்துணையா,–வானில்
அடியார்க்குழாங்கூட வாசையுற்றமாறன்,
அடியாருடன் நெஞ்சே யாடு. (13)

ஆடிமகிழ் வானி லடியார் குழாங்களுடன்,
கூடியின்ப மெய்தாக் குறையதனால், – வாடிமிக
அன்புற்றார் தந்நிலைமை யாய்ந்துரைக்க மோகித்துத்,
துன்புற்றான் மாறனந்தோ. (14)

அந்தாமத்தன்பா லடியார்களோடிறைவன்,
வந்தாரத்தான்கலந்த வண்மையினால்,–– சந்தாபம்
தீர்ந்தசடகோபன் திருவடிக்கேநெஞ்சமே,
வாய்ந்தவன்பை நாடோறும்வை. (15)

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்,
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து,–– நைகின்ற
தன்மைதனைக் கண்டுன்னைத் தான்விடே னென்றுரைக்க,
வன்மையடைந் தான்கேச வன். (16)

கேசவனாலெந்தமர்கள் கீழ்மே லெழுபிறப்பும்
தேசடைந்தா ரென்று சிறந்துரைத்த, –– வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல் லாமுய்கைக்கு,
ஆறென்றுநெஞ்சே யணை. (17)

அணைந்தவர்க்க டம்முடனே யாயனருட் காளாம்,
குணந்தனையே கொண்டுலகைக்கூட்ட,––இணங்கிமிக
மாசிலுப தேசஞ்செய் மாறன் மலரடியே,
வீச புகழெம்மா வீடு. (18)

எம்மாவீ டும்வேண்டா வென்றனக்குன் றாளிணையே,
அம்மா வமையுமென வாய்ந்துரைத்த,--நம்முடைய
வாழ்முதலா மாறன் மலர்த்தா ளிணைசூடிக்,
கீழ்மையற்று நெஞ்சே கிளர். (19)

கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க,
வளரொளிமால் சோலை மலைக்கே, --தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனு நீடுபுகழ் மாறன்றாள்,
முன்செலுத்து வோமெம் முடி. (20)

முடியார் திருமலையில் முண்டுநின்ற மாறன்,
அடிவாரந் தன்னில் அழகர் - வடிவழகைப் பற்றி,
முடியும் அடியும் படிகலனும்,
முற்றும் அனுபவித்தான் முன். (21)

முன்னம் அழகரெழில் மூழ்குங் குருகையர்க்கோன்,
இன்னஅள வென்ன எனக்கரிதாய்த் - தென்ன,
கரணக் குறையின் கலக்கத்தை,
கண்ணன் ஒருமைப் படுத்தான் ஒழிந்து. (22)

ஒழிவிலாக் காலம் உடனாகி மன்னி,
வழுவிலா ஆட்செய்ய மாலுக்கு, - எழுசிகர
வேங்கடத்தைப் பாரித்த மிக்கநலஞ் சேர்மாறன்,
பூங்கழலை நெஞ்சே! புகழ். (23)

புகழொன்று மாலெப் பொருள்களுந் தானாய்,
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க - மகிழ்மாறன்,
எங்கும் அடிமைசெய இச்சித்து வாசிகமாய்,
அங்கடிமை செய்தான்மொய்ம் பால். (24)

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்துவப்பால்,
அன்பாலாட் செய்பவரை யாதரித்தும், - அன்பிலா
மூடரைநிந் தித்தும் மொழிந்தருளும் மாறன்பால்,
தேடரிய பத்திநெஞ்சே! செய். (25)

செய்ய பரத்துவமாய்ச் சீரார் வியூகமாய்,
துய்ய விபவமுமாய்த் தோன்றிவற்றுள், -எய்துமவர்க்
கிந்நிலத்தில் அர்ச்சாவ தாரம் எளிதென்றான்,
பன்னுதமிழ் மாறன் பயின்று. (26)

பயிலுந் திருமால் பதந்தன்னில்,
நெஞ்சம் தயலுண்டு நிற்குந் ததியர்க்கு - இயல்வுடனே
ஆளானார்க் காளாகும் மாறன் அடியதனில்,
ஆளாகார் சன்மமுடி யா. (27)

முடியாத ஆசைமிக முற்றுகர ணங்கள்,
அடியார்தம் மைவிட் டவன்பால் - படியா,
ஒன் றொன்றின் செயல்விரும்ப உள்ளதெல்லாந் தாம்விரும்பத்,
துன்னியதே மாறன்றன் சொல். (28)

‘சொன்னாவில் வாழ்புலவீர்! சோறுகூ றைக்காக,
மன்னாத மானிடரை வாழ்த்துதலால், - என்னாகும்?
என்னுடனே மாதவனை ஏத்தும்‘ எனுங்குருகூர்,
மன்னருளான் மாறுஞ்சன் மம். (29)

‘சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும்
நன்மையுடை மால்குணத்தை நாடோறும், – இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றேன்‘ எனுமா றனையுலகீர்,
நாத்தழும்ப ஏத்துமொரு நாள். (30)

ஒருநா யகமாய் உலகுக்கு,
வானோர் இருநாட்டில் ஏறியுய்க்கும் இன்பம் – திரமாகா,
மன்னுயிர்ப்போ கந்தீது மாலடிமை யேயினிதாம்,
பன்னியிவை மாறனுரைப் பால். (31)

பாலரைப்போற் சீழ்கிப் பரனளவில் வேட்கையால்,
காலத்தாற் றேசத்தாற் கைகழிந்த, – சால
அரிதான போகத்தில் ஆசையுற்று நைந்தான்,
குருகூரில் வந்துதித்த கோ. (32)

கோவான ஈசன் குறைவெல்லாந் தீரவே
ஓவாத காலத் துவாதிதனை, – மேவிக்
கழித்தடையக் காட்டிக் கலந்தகுண மாறன்,
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண். (33)

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகை யால்,
மாறன் பெண்ணிலைமை யாய்க்காதற் பித்தேறி, – எண்ணிடில்
முன் போலிமுத லான பொருளையவ னாய்நினைந்து,
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு. (34)

வீற்றிருக்கும் மால்விண்ணில் மிக்க மயல்தன்னை,
ஆற்றுதற்காத் தன்பெருமை யானதெல்லாம்,
தோற்ற வந்து நன்றுகலக் கப்போற்றி நன்குகந்து வீறுரைத்தான்,
சென்ற துயர்மாறன் தீர்ந்து. (35)

தீர்ப்பா ரிலாதமயல் தீரக் கலந்தமால்,
ஓர்ப்பாது மின்றி யுடன்பிரிய, – நேர்க்க
அறிவழிந்துற் றாரும் அறக்கலங்க,
பேர்க்கேட் டறிவுபெற்றான் மாறஞ்சீ லம். (36)

சீலமிகு கண்ணன் திருநாமத் தாலுணர்ந்து,
மேலவன்றன் மேனிகண்டு மேவுதற்குச், – சால
வருந்தியிர வும்பகலும் மாறாமற் கூப்பிட்,
டிருந்தனனே தென்குருகூர் ஏறு. (37)

‘ஏறு திருருவுடைய ஈச னுகப்புக்கு,
வேறுபடி லென்னுடைமை மிக்கவுயிர், – தேறுங்கால்
என்றனக்கும் வேண்டா‘ எனுமாறன் தாளைநெஞ்சே,
நண்தமக்குப் பேறாக நண்ணு. (38)

நண்ணாது மாலடியை நானிலத்தே வல்வினையால்
எண்ணாராத் துன்பமுறு மிவ்வுயிர்கள்,
தண்ணிமையைக் கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறனருள்,
உண்டுநமக் குற்றதுணை யொன்று. (39)

‘ஒன்றுமிலைத் தேவிவ் வுலகம் படைத்தமால்,
அன்றி‘என யாரு மறியவே, – நன்றாக
மூதலித்துப் பேசியருள் மொய்மகிழோன் தாள் தொழவே,
காதலிக்கு மென்னுடைய கை. (40)

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக் கேயிருக்கப்,

பொய்யாகப் பேசும் புறனுரைக்கு, – மெய்யான
பேற்றை யுபகரித்த பேரருளின் றன்மைதனைப்
போற்றினனே மாறன் பொலிந்து. (41)

பொலிக பொலிகவென்று பூமகள்கோன் றொண்டர்,
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி – உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திமா றஞ்சொல்,
மருந்தாகப் போகுமன மாசு. (42)

மாசறு சோதிகண்ணன் வந்துகல வாமையால்,
ஆசை மிகுந்துபழிக் கஞ்சாமல், – ஏசறவே
மண்ணில் மடலூர மாறன் ஒருமித்தான்,
உண்ணடுங்கத் தான்பிறந்த ஊர். (43)

ஊர நினைந்தமட லூரவுமொண் ணாதபடி,
கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று, – பேராமல்
தீதுசெய் மாறன் றிருவுளத்திற் சென்றதுயர்,
ஓதுவதிங் கெங்ஙனே யோ? (44)

'எங்ஙனே நீர்முனிவ தென்னையினி? நம்பியழகு,
இங்ஙனே தோன்றுகின்ற தென்முன்'என,–அங்ஙன்
உருவெளிப் பாடா வுரைத்ததமிழ் மாறன்,
கருதுமவர்க் கின்பக் கடல். (45)

கடல்ஞாலத் தீசனைமுன் காணாமல் நொந்தே,
உடனா அனுசரிக்க லுற்றுத்,– திடமாக
வாய்ந்தவனாய்த் தான்பேசும் மாறன் உரையதனை
ஆய்ந்துரைப்பா ராட்செயநோற் றார். (46)

'நோற்றநோன் பாதியிலேன் நுன்றனைவிட் டாற்றகில்லேன்,
பேற்றுக் குபாயமுன்றன் பேரருளே–சாற்றுகின்றேன்,
இங்கென்னிலை' என்னும் எழில்மாறன் சொல்வல்லார்,
அங்கமரர்க் காரா அமுது. (47)

ஆரா அமுதாழ்வார் ஆதரித்த பேறுகளைத்
தாராமை யாலே தளர்ந்துமிகத் – தீராத
ஆசையுடன் ஆறாமை பேசி அலமந்தான்,
மாசறுசீர் மாறனெம் மான். (48)

மாநலத்தால் மாறன் றிருவல்ல வாழ்புகப்போய்த்,
தானிளைத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில் – மேனலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன சொலவுகற்பார்
தங்களுக்குப் பின்பிறக்க வேண்டாப் பிற. (49)

'பிறந்துலகங் காத்தளிக்கும் பேரருட்கண் ணா!உன்
சிறந்தகுணத் தாலுருகுஞ் சீலத் – திறந்தவிர்த்து,
சேர்ந்தனுப விக்குநிலை செய்' என்ற சீர்மாறன்,
வாய்ந்தபதத் தேமனமே! வைகு. (50)

'வைகல்திரு வண்வண்டூர் வைகும் இராமனுக்கு,
என் செய்கைதனைப் புள்ளினங்காள்!செப்பும்'எனக்–கைகழிந்த
காதலுடன் தூதுவிடுங் காரிமா றன்கழலே,
மேதினியீர்! நீர்வணங்கு மின். (51)

மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தெனவந் தானென்று,
தன்னிலைப்போய்ப் பெண்ணிலையாய்த் தான்றள்ளி,–'உன்னுடனே

கூடேன்?'என் றூடுங் குருகையர்க்கோன் தாள்தொழவே,
நாடோறும் நெஞ்சமே! நல்கு. (52)

நல்லவலத் தால்நம்மைச் சேர்த்தோன்முன் னண்ணாரை,
வெல்லும் விருத்த விபூதியனென்று, – எல்லையறத்
தானிருந்து வாழ்த்துந் தமிழ்மாறன் சொல்வல்லார்,
வானவர்க்கு வாய்த்தகுரவர். (53)

'குரவைமுத லாங்கண்ணன் கோலச் செயல்கள்,
இரவுபக லென்னாம லென்றும், – பரவுமனம்
பெற்றென்!'என் றேகளித்துப் பேசும் பராங்குசன்றன்,
சொற்றேனில் நெஞ்சமே! துவள். (54)

துவளறுசீர் மால்திறத்து தொன்னலத்தால்,
நாளும் துவளறுதன் சீலமெல்லாஞ் சொன்னான், – துவளறவே
முன்னம் அனுபவத்தில் மூழ்கிநின்ற மாறனதில்,
மன்னுமுவப் பால்வந்த மால். (55)

மாலுடனே தான்கலந்து வாழப் பெறாமையால்,
சாலநைந்து தன்னுடைமை தானடையக் – கோலியே,
தானிகழ வேண்டாமற் றன்னைவிடல சொல்மாறன்,
ஊனமறு சீர்நெஞ்சே! உண். (56)

'உண்ணுஞ்சோ றாதி யொருமூன்றும் எம்பெருமான்
கண்ணன்'என்றே நீர்மல்கிக் கண்ணிணைகள், – மண்ணுலகில்
மன்னுதிருக் கோளூரில் மாயன்பாற் போமாறன்,
பொன்னடியே நந்தமக்குப் பொன். (57)

பொன்னுலகு பூமியெல்லாம் புள்ளினங்கட் கேவழங்கி,
'என்னிடரை மாலுக் கியம்பும்'என – மன்னுதிரு
நாடு முதற்றூது நல்கிவிடு மாறனையே
நீடுலகீர்!போய்வணங்கும் நீர். (58)

நீராகிக் கேட்டவர்க ணெஞ்சழிய,
மாலுக்கும் ஏரார் விசும்பி லிருப்பரிதா–, ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமா றஞ்சொல்லை,
ஓதிடவே யுய்யும் உலகு. (59)

உலகுயமால் நின்ற யுயர்வேங் கடத்தே,
அலர்மகளை முன்னிட் டவன்றன், – மலரடியே
வஞ்சரணாய்ச் சேர்ந்த மகிழ்மாறன் றாளிணையே,
உஞ்சரணாய் நெஞ்சமே! உள். (60)

'உண்ணிலா வைவ ருடனிருத்தி யிவ்வுலகில்,
எண்ணிலா மாய னெனைநலிய, – எண்ணுகின்றான்'
என்றுநினைந் தோலமிட்ட இன்புகழ்சேர் மாறனெனக்,
குன்றிவிடு மேபவக்கங் குல். (61)

கங்குல் பகலரதி கைவிஞ்சி மேகமுற,
அங்கதனைக் கண்டோ ரரங்கரைப்பார்த்து, – 'இங்கிவள்பால்
எஞ்செயநீ ரெண்ணுகின்ற தென்னுனிலை சேர்மாறன்,
அஞ்சொலுற நெஞ்சுவெள்ளை யாம். (62)

வெள்ளியநா மங்கேட்டு விட்டகன்ற பின்மோகம்,
தெள்ளியமால் தென்றிருப்பேர் சென்றுபுக, – உள்ளமங்கே
பற்றிநின்ற தன்மை பகருஞ் சடகோபற்கு,

அற்றவர்கள் தாமாழி யார். (63)

ஆழிவண்ணன் றன்விசய மானவைமுற் றுங்காட்டி,
'வாழிதனால்!' என்று மகிழ்ந்துநிற்க, – ஊழிலவை
தன்னையின்று போற்கண்டு தானுரைத்த மாறஞ்சொல்,
பன்னுவரே நல்லதுகற் பார். (64)

கற்றோர் கருதும் விசயங்க ளுக்கெல்லாம்,
பற்றாம் விபவகுணப் பண்புகளை, – உற்றுணர்ந்து
மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன் சொல்,
பண்ணிலினி தானதமிழ்ப் பா. (65)

பாமருவு வேதம் பகர்மால் குணங்களுடன்,
ஆமழகு வேண்டற்பா டாமவற்றைத், – தூமனத்தால்
நண்ணியவ னைக்காண நன்குருகைக் கூப்பிட்ட,
அண்ணலைநண் ணார்ஏழை யர். (66)

ஏழையர்கள் நெஞ்சை இளகுவிக்கும் மாலழகு,
சூழவந்து தோன்றித் துயர்விளைக்க, – ஆழுமனம்
தன்னுடனே அவ்வழக்கைத் தானுரைத்த மாறன்பால்,
மன்னுமவர் தீவினைபோம் மாய்ந்து. (67)

மாயாமல் தன்னைவைத்த வைசித் திரியாலே,
தீயா விசித்திரமாய்ச் சேர்பொருளோ, – டோயாமல்,
வாய்ந்துநிற்கும் மாயன் வளமுறைத்து மாறனைநாம்,
ஏந்துறைத்து வாழும்நாள் என்று? (68)

'என்றனைநீ யிங்குவைத்த தேதுக்' கென,
மாலும் 'என்றனக்கு மென்றமர்க்கு மின்பமதா, – நன்றுகவி
பாட'எனக் கைம்மா றிலாமை,
பகர்மாறன் பாடணைவார்க் குண்டாமின் பம். (69)

இன்பக் கவிபாடு வித்தோனை யிந்திரையோடு,
அன்புற்று வாழ்திருவா றன்விளையில், – துன்பமறக்
கண்டடிமை செய்யக் கருதியமா றன்கழலே,
திண்டிறலோர் யாவர்க்குந் தேவு. (70)

தேவ னுறைபதியிற் சேரப் பொறாமையால்,
மேவுமடி யார்வசனாம் மெய்ந்நிலையும், – யாவையுந்தான்
ஆம்நிலையுஞ் சங்கித் தவைதெளிந்த மாறன்பால்,
மாநிலத்தீர்! நங்கள் மனம். (71)

நங்கருத்தை நன்றாக நாடிநிற்கும் மாலறிய,
இங்கிவற்றி லாசை யெமக்குளதென்? – சங்கையினால்,
தன்னுயிரின் மற்றினசை தானொழிந்த மாறன்றான்,
அந்நிலையை யாய்ந்துரைத்தான் அங்கு. (72)

அங்கமரர் போன அவர்நடுவே வாழ்ந்திருமற்கு,
இங்கோர் பரிவரிலை யென்றஞ்ச, – எங்கும்,
பரிவருள ரென்னைப் பயந்தீர்ந்த மாறன்,
வரிகழற்றாள் சேர்ந்தவர்வாழ் வார். (73)

வாராமல் அச்சமினி மால்தன் வலியினையும்,
சீரார் பரிவருடன் சேர்ந்தினையும், – பாருமெனத்
தானுகந்த மாறன்றாள் சார்நெஞ்சே! சாராயேல்,
மானிடவ ரைச்சார்ந்து மாய். (74)

மாயன் வடிவழகைக் காணாத வல்விடா யாய்,
அதற விஞ்சி அழுதலற்றும், – தூயபுகழ்
உற்றசட கோபனைநாம் ஒன்றிநிற்கும் போதுபகல்,
அற்றபொழு தானதெல்லி யாம். (75)

‘எல்லி பகல்நடந்த இந்தவிடாய் தீருகைக்கு,
மெல்லவந்து தான்கலக்க வேணும்‘ என, – நல்லவர்கள்
மன்னுகடித் தானத்தே மாலிருக்க மாறன்கண்டு,
இந்நிலையைச் சொன்னான் இருந்து. (76)

இருந்தவன்றான் வந்திங் கிவரெண்ண மெல்லாம்,
திருந்தஇவர் தந்திறத்தே செய்து, – பொருந்தக்
கலந்தினிய னாய்நிற்க் கண்டசட கோபன்,
கலந்தநெறி கட்டுரைத்தான் கண்டு. (77)

கண்ணிறைய வந்து கலந்தமால் இக்கலவி,
திண்ணிலய வேணுமெனச் சிந்தித்து, – தண்ணிதெனும்
ஆருயிரி னேற்றம் அதுகாட்ட ஆய்ந்துரைத்தான்,
காறிமா றன்றன் கருத்து. (78)

கருமால் திறத்திலோரு கன்னிகையாம் மாறன்,
ஒருமா கலவி யுரைப்பால், – திறமாக
அந்நியருக் காக தவன்றனக்கே யாகுமுயிர்,
இந்நிலையை யோர்நெடி தா. (79)

நெடுமா லழுகுதனில் நீள்குணத்தில்,
ஈடு படுமா நிலையுடைய பத்தர், – அடிமைதனில்
எல்லைநிலந் தானாக எண்ணினான் மாறன்,
அது கொல்லைநில மானநிலை கொண்டு. (80)

‘கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்றார்,
கன்மத்தால் அணினவர் என்றே அவரைவிட்டுத், – தொண்டருடன்
சேர்க்குந் திருமாலைச் சேரும், என்றான்,
ஆர்க்கும்இதம் பார்க்கும் புகழ்மாறன் பண்டு. (81)

பண்டையுற வான பரனைப் புளிங்குடிக்கே கண்டு,
‘எனக்கெல் லாவுறவின் காரியமும், – தண்டறநீ
செய்தருள்‘ என் றேயிரந்த சீர்மாறன் றாளிணையை,
உய்துணையென் றுள்ளமே! ஓர். (82)

‘ஓராநீர் வேண்டினவை யுள்ளதெல்லாஞ் செய்கின்றேன்,
நாரா யனன்றோ நான்?‘ என்று, – பேருறவைக்
காட்டவவன் சீலத்திற் கால்தாழ்ந்த மாறனருள்,
மாட்டிவிடும் நம்மனத்து மை. (83)

மையார்கண் மாமார்பின் மன்னுந் திருமாலைக்,
கையாழி சங்குடனே காணவெண்ணி, – மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்,
ஓதவுய்யு மேயின் னுயுர். (84)

‘இன்னுயிர்மால் தோன்றினதிங் கென்னெஞ்சில்‘ என்று,
கண்ணால் அன்றவனைக் காணவெண்ணி,
ஆண்பெண்ணாய்ப், பின்னையவன் தன்னைநினை
விப்பவற்றால் தான்தளர்ந்த மாறனருள், உன்னுமர்க் குள்ளமுரு கும். (85)

‘உருகுமால் என்னெஞ்சம் உஞ்செயல்க ளெண்ணிப்,
பெருகுமால் வேட்கை‘எனப் பேசி, – மருவுகின்ற
இன்னாப் புடனவஞ்சீர் ஏய்ந்துரைத்த மாறஞ்சொல்,
என்னாச்சொல் லாதிருப்ப தெங்கு? (86)

‘எங்காத லுக்கடிமால் ஏய்ந்த வடிவழகென்று‘
அங்காது பற்றாசா ஆங்கவன்பால், – எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப் போகவிடும் மாறன்றாள்,
உள்ளினர்க்குத் தீங்கையறுக் கும். (87)

‘அறுக்குமிடர்‘ என்றவன்பால் ஆங்குவிட்ட தூதர்,
மறித்துவரப் பற்றா மனத்தால், – அறப்பதறிச்
செய்யதிரு நாவாயிற் சொல்லங்கினைந் தான்,
மாறன் மையலினாற் செய்வறியா மல். (88)

மல்லடிமை செய்யும்நாள் மால்தனைக் கேட்ட,
அவன் சொல்லுமள வும்பற்றாத் தொன்னலத்தால், – செல்கின்ற
ஆற்றாமை பேசி அலமந்த மாறனருள்,
மாற்றாகப் போகுமென்றன் மால். (89)

‘மாலுமது வாஞ்சைமுற்றும் மன்னுமுடம் பின்முடிவில்
சாலநண்ணிச் செய்வன்‘எனத் தானுகந்து – மேலவனைச்
சீரார் கணபுரத்தே சேரும்‘ என்னுஞ் சீர்மாறன்,
தாரானோ நந்தமக்குத் தாள்? (90)

தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழிந்துணையாம்,
காளமே கத்தை கதியாக்கி, – மீளுதலாம்
ஏதமிலா விண்ணுலகி லேகவெண்ணும் மாறனென,
கேதமுள்ள தெல்லாம் கெடும். (91)

கெடுமிடர் வைகுந்தத் தைக்கிட்டி னாற்போல்,
தடமுடைய னந்தபுரந் தன்னில், – படவரவில்
கண்டுயில்மாற் காட்செய்யக் கதலித்தான் மாறன்,
உயர் விண்டனிலுள் ளோர்வியப்ப வே. (92)

வேய்மருதோள் இந்திரைகோன் மேவுகின்ற தேசத்தைத்
தான்மருவாத் தன்மையினால் தன்னையின்னம் – பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால்தெளிவிக் கத்தெளிந்த,
தக்கபுகழ் மாறனெங்கள் சார்வு. (93)

சார்வாக வேயடிற் றானுரைத்த பத்திதான்,
சீரார் பலத்துடனே சேர்ந்ததனைச், – சேராமல்
கண்டுரைத்த மாறன் கழலிணையே நாடோறும்
கண்டுகக்கு மென்னுடைய கண். (94)

கண்ணன் அடியினையிற் காதலுறு வார்செயலைத்
திண்ணமுற வேசுருங்கச் செப்பியே, – மன்னவருக்குத்
தானுபதே சிக்கை தலைக்கட்டி னான்மாறன்,
ஆனபுகழ் சேர்தன் அருள். (95)

அருளா லடியி லெடுத்தமா லன்பால்,
இருளார்ந்த தம்முடம்பை யிச்சித்து, – இருவிசும்பில்
இத்துடன்கொண் டேகவிவ ரிசைவுபார்த் தேயிருந்த,
சுத்திசொல்லும் மாறஞ்செஞ் சொல். (96)

செஞ்சொற் பரன்றனது சீராரு மேனிதனில்

வஞ்சித்துச் செய்கின்ற வாஞ்சைதனில், – விஞ்சுதலைக்
கண்டவனைக் காற்கட்டிக் கைவிடுவித்
துக்கொண்ட திண்டிறல்மா றன்நம் திரு. (97)

திருமால்தன் பால்விருப்பஞ் செய்கின்ற நேர்க்கண்டு,
‘அருமாயத் தன்றகல்விப் பானென்?, – பெருமால்நீ
இன்றென்பாற் செய்வானென்?‘ என்னவிட்டர் உற்றுநின்றான்,
துன்றுபுகழ் மாறனைத்தான் சூழ்ந்து. (98)

சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழி காட்ட,
ஆழ்ந்ததனை முற்றும் அனுபவித்து, – வாழ்ந்தங்
கடியருட னேயிருந்த வாற்றையுரை செய்தான்,
முடிமகிழ்சேர் ஞான முனி. (99)

முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கித்,
தனியாகி நின்று தளர்ந்து, – நனியாம்
பரமபத்தி யால்நந்து பங்கையர்த்தாள் கோனை,
ஒருமையுற்றுச் சேர்ந்தான் உயர்ந்து. (100)

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்!
மணவாள மாமுனி திருவடிகளே சரணம்!